பத்தாம் வகுப்பு மாதிரி வினாத்தாள்,2022-2023

X-STD SAMPLE QUESTION PAPER, 2022-2023

தமிழ் (TAMIL 006)

கால அளவு:3மணி மொத்த மதிப்பெண்கள்: 80

Time allowed : 3 Hrs Maximum Marks : 80

பகுதி - அ

I. அ. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக..

5x1=5

ஆழமான நீர் நிலை மடு எனப்படும். அச்சொல்லைக் கொண்ட ஊர்ப் பெயர்கள் பல தமிழகத்தில் உண்டு. நெல்லை நாட்டுக் கல்மடுவும், தஞ்சைநாட்டு முதலைமடுவும், தென்ஆர்க்காட்டு ஆனைமடுவும், சேலம் நாட்டுச் செம்மடுவும் இத்தகையனவாகும்.

இலஞ்சி என்னும் சொல் ஏரியைக் குறிக்கும். நெல்லை நாட்டில் தென்காசிக்கு அருகே இலஞ்சி என்ற ஊர் சிறந்து விளங்குகின்றது. செல்வச் செழுமையால் பொன்னிலஞ்சியென்று புகழ்ந்துரைக்கப்பட்டது அவ்வூர்,

இயற்கையில் அமைந்த நீர்நிலை பொய்கை எனப்படும். பொய்கையார் என்பது ஒரு பழந்தமிழ்ப் புலவரின் பெயர், அவர் பொய்கை என்ற ஊரில் பிறந்தவர் என்பர். இன்னும் முதலாழ்வார்கள் என்று அழைக்கப்படுகின்ற மூவரில் ஒருவர் பொய்கை ஆழ்வார். காஞ்சிபுரத்திலுள்ள திருவெஃகா என்னும் திருமால் கோயிலை அடுத்துள்ள தாமரைப் பொய்கையிற் பிறந்தவராதலால் அவர் பொய்கை ஆழ்வார் என்னும் பெயர் பெற்றார் உண்பதற்குரிய தண்ணீர் நிறைந்த குளம் ஊருணி எனப்படும். ஊரார் உண்ணும் நீரையுடையதாதலால் ஊருணி என்னும் பெயர் அதற்கு அமைந்ததென்பர். ஊருணியின் பெயரால் வழங்கப்பெறும் ஊர்கள் தமிழ்நாட்டில் பல உண்டு. பேரூரணி என்ற ஊர் நெல்லை நாட்டிலுள்ளது. மயிலூரணி இராமநாதபுரத்தில் காணப்படும்.

இன்னும், ஊற்று நீரால் நிறையும் கேணியும் கிணறும் சில ஊர்களைத் தோற்றுவித்துள்ளன. சென்னை மாநகரிலுள்ள ' திருவல்லிக்கேணியும், நெல்லை நாட்டிலுள்ள நாரைக் கிணறும் இவ்வுண்மைக்குச் சான்றாகும்.

வினாக்கள்:

1. இயற்கையில் அமைந்த நீர்நிலையின் பெயர் யாது?

   அ) இலஞ்சி ஆ) பொய்கை இ) ஊருணி ஈ) கண்மாய்

2. உண்பதற்குரிய நீர் நிறைந்த குளத்தின் பெயரில் அமைந்த ஊர்____________

அ) ஆனை மடு ஆ)பொன்னிலஞ்சி இ) ஊருணி ஈ) பேரூரணி

3. நீர் நிலையின் பெயர் கொண்ட பழந்தமிழ்ப் புலவர் யார்?

   அ) முதலாழ்வார் ஆ) நம்மாழ்வார் இ) பொய்கையார் ஈ)ஆழ்வார்

4. சென்னையில் நீர் நிலையின் பெயர் கொண்ட பகுதியாக விளங்குவது எது?

   அ) திருவல்லிக்கேணி ஆ) நாரைக் கிணறு இ)பெரம்பூர் ஈ)எழும்பூர்

5. ஆழமான நீர்நிலை எவ்வாறு அழைக்கப்படும்?
   அ) ஆனை மடு ஆ) மடு இ) பள்ளம் ஈ) கடல்

(அல்லது)

<u>ஆ. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக</u>

கருதியதை முடிப்பதற்குரிய வழிவகைகளைக் காட்டுவதில் திருவள்ளுவர் வல்லவர். அறம் பற்றிய பல்வேறு வகையான கருத்துகள் இவ்வுலகில் உண்டு. “அறத்தைச் செய்க' என்று ஆணையிடுவது பிறமொழிகளின் மரபு. "அறம் செய விரும்பு” என்பது தமிழ் மொழியின் மரபு. மனம், மெய், மொழி- இவற்றின் துணைகொண்டு அறம் செய்ய வேண்டும். இவற்றுள் மொழியால் - மெய்யால் செய்யக்கூடிய அறங்களில் பொய்ம்மையும் வஞ்சனையும் இருக்கக் கூடும். ஆனால் மனத்தால் எண்ணிச் செய்யக் கூடிய அறங்களில் மேற்கூறியவற்றிற்கு இடமே இல்லை. அதனால்தான் “மனத்துக்கண் மாசிலன் ஆதல்” என்கிறார் வள்ளுவர். செயல்கள் அனைத்திற்கும் சிந்தனையே அடிப்படை. சிந்தனையின் நிலைக்களன் மனம். ஆகவே நாம் செய்யும் செயல்கள் அனைத்திற்கும் பொறுப்பாக உள்ள சிந்தனையைத் திருத்தி மாசின்றி வைத்துக் கொள்வது நல்லது; சிறந்தது. இதன் மூலம் நாம் செய்யும் அறங்களும் மிகச் சிறந்து விளங்கும். மனத்தூய்மை இன்றிச் செய்யப்பெறும் அறங்கள் செய்பவர்க்கும், செய்யப் பெறுவோர்க்கும் பயன் தராது. மனத்தூய்மை வாழ்க்கை முழுவதுமே சாதித்துத் தரக்கூடியது. அதை முயன்று பெறுவதே அறம். மற்றவை எல்லாம் ஆரவாரத் தன்மை உடையன. இதனையே திருவள்ளுவர் தாம் இயற்றிய திருக்குறளில்,

”மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்

ஆகுல நீர பிற ” என்று கூறுகிறார்.

<u>வினாக்கள்</u>

1. "அறத்தைச் செய்க” என்று ஆணையிடுவது எம்மரபு?

   அ. தமிழ்மரபு ஆ. பெரியோர் கூறும் மரபு இ. சமயம் கூறும் மரபு

ஈ. பிறமொழிகளின் மரபு

2. மொழியால் - மெய்யால் செய்யக்கூடிய அறங்களில் எவை இருக்கக்கூடும்?

அ.நன்மையும் தீமையும் ஆ. பொய்ம்மையும் வஞ்சனையும்

இ. அன்பும் இரக்கமும் ஈ. வாய்மையும் நேர்மையும்

3. சிந்தனையின் நிலைக்களன் எது?

அ. மனம் ஆ. கண் இ. நாக்கு ஈ. அறிவு

4. வாழ்க்கையில் சாதிக்க வேண்டுமானால் தேவையானது எது?

அ. உடல்பலம் ஆ .செல்வம் இ. மனத்தூய்மை ஈ. ஆள்பலம்

5. செயல்கள் அனைத்திற்கும் அடிப்படையாய் அமைவது எது?

அ. செல்வம் ஆ. சிந்தனை இ. அறம் ஈ. இரக்கம்

II. அ. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவு செய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக

5x1=5

இராமேஸ்வரம், தூத்துக்குடி இடையே மன்னார் வளைகுடா கடல் பகுதியில் தூய்மையான பகுதியாக 21 தீவுகள் மட்டுமே உள்ளன. பிற கடலோரப் பகுதிகளில் பெரும்பாலான பகுதிகள், குடியிருப்புகள் மற்றும் மீன்பிடி கழிவுகளால் அசுத்தம் அடைந்து வருகின்றன. தீவுகளைச் சுற்றிலும் ஏராளமான கடல் வளங்கள் காணப்படுவதால் அங்கு சுகாதாரத்தைத் தக்கவைக்க, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது ஒருபுறமிருக்க, கடல்வழியாக அடித்துவரப்படும் நெகிழிக் கழிவுகள், மன்னார் வளைகுடாவின் பெரும்பான்மைத் தீவுகளில் குவிந்து வருகின்றன. தீவுகளை ஒட்டிய பவளப் பாறைகளில் படியும் இதுபோன்ற கழிவுகளால் உயிரினங்களுக்குப் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றன. இதற்கிடையில் கடலின் அடிப்பகுதி தொடர்ந்து மாசுபட்டு வருவதால் கடலுக்கு அடியில் தேடுதலில் ஈடுபடும் சுழியோடிகளுக்குப் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றன. நீண்டநேரம் சுவாசத்தைத் தக்கவைக்க அதற்கான உபகரணங்களைச் சுழியோடிகள் எடுத்துக் கொள்கின்றனர். ஆய்வு மற்றும் கண்காணிப்பிற்காக அவ்வப்போது பவளப்பாறைகளைச் சேகரிக்கவேண்டியது இவர்களின் பணியாகும். தற்போது கழிவுகள் அதிகமாகக் கலப்பதால் பவளப் பாறைகளைக் கண்டுகொள்வதில்சிரமப்படுகின்றனர்.

மூழ்கிச் செல்லும் போது நெகிழிக் கழிவுகள் உடலில் தொற்றிக் கொள்வதால் நீச்சல் பாதிக்கிறது. செயற்கை சுவாசக் குழாய்களில் கழிவுகள் அடைத்து சுவாசப்பிரச்சினை ஏற்படுகிறது. சமீபகாலமாக அதிகரித்துவரும் இப்பிரச்சினையால் மன்னார் வளைகுடா பகுதி சுழியோடிகளுக்குச் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

**வினாக்கள்**

1. மன்னார் வளைகுடாவில் எத்தனை தீவுகள் உள்ளன?

   அ. 18 தீவுகள்ஆ. 21தீவுகள் ஈ. 26 தீவுகள் இ. 17தீவுகள்

2. தீவுகளைச் சுற்றிலும் காணப்படுபவை யாவை?

   ஆ. நிலவளங்கள் இ. கனிம வளங்கள்

   அ. கடல் வளங்கள் ஈ. எரிபொருள்கள்

3. எதனால் கடல்வாழ் உயிரினங்களுக்குப் பல்வேறு பாதிப்புகள் ஏற்படுகின்றன?

   அ. உப்பால் ஆ. கப்பல்களால் இ. நெகிழிக் கழிவுகளால்

   ஈ. பவளப்பாறைகளால்

4. பவளப்பாறைகளைச் சேகரிப்போர் யார்?

   அ. மாலுமிகள்ஆ. துடுப்பு தள்ளுவோர் இ. மீனவர்கள்

   ஈ. சுழியோடிகள்

5. மூழ்கிச் செல்லும்போது நெகிழிக் கழிவுகள் உடலில் தொற்றிக் கொள்வதால் எது பாதிக்கிறது?

   அ. நீச்சல் ஆ. ஓட்டம் இ. நடைப்பயிற்சி ஈ. தாண்டுதல்

(அல்லது)

**ஆ பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள் தெரிவுசெய் வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக**

"நான் நிறைய உழைக்கிறேன்,ஆனால் பயன் கிடைக்கவில்லையே" என்று நிறையப் பேர் வருத்தப்படுகிறார்கள் - உழைப்பினால் மட்டுமே உயர்ந்துவிட முடியுமா? பலரின் உழைப்பு விழலுக்கு இறைத்த நீர் போல வீணாகிப் போவதையும் காண்கிறோம்.

நம் உழைப்பைச் சரியான திசையில், சரியான பலத்துடன், இலக்கை நோக்கிய தீவிரத்துடன் செலுத்தும் போதுதான் வெற்றி பெறமுடியும்.

ஆங்கிலத்தில் 'நூறு விழுக்காடு (100%) திறன், சுழியம் விழுக்காடு (0%) பயன்' என்கிற வாசகம் உண்டு.

ஒருவனை அழைத்து, "முகத்தைக் கழுவிக் கொண்டு, திருநீறு பூசிக் கொண்டு வா" என்று அவனுடைய தந்தை கூறினார்.

போனவன் போனபோது இருந்த மாதிரியே திரும்ப வந்தான்.

"ஏன் நான் சொன்னதைச் செய்யாமல் வருகிறாய்?" என்று தந்தை கோபப்பட்டார்.

"நீங்கள் சொன்னமாதிரியே திருநீறு பூசி விட்டுப் பின் முகத்தைக் கழுவி வந்தேன்" என்றான் மகன் பெருமையாக. இதுதான் நூறு விழுக்காடு (100%) திறன், சுழியம் விழுக்காடு (0%) பயன் ஆகும்.

நம் உழைப்பானது விழிப்புடனும், திட்டமிட்ட முயற்சியுடனும் இருக்கும் போதுதான் நூறு விழுக்காடு பயனைப் பெற முடியும் . வியர்வையே பன்னீர்தான் ஆனால் அதனையும் முறையாகச் சிந்துவதே முறை.

<u>வினாக்கள்:</u>

1. நிறையப் பேர் எதற்காக வருத்தப்படுகிறார்கள் ?
   அ) கடுமையாக உழைப்பதால் ஆ)அதிக நேரம் உழைப்பதால்
   இ) நிறைய உழைத்தும் பயன் கிடைக்காததால்
   ஈ) பயன் கிடைக்காததால்
2. எப்போது நாம் வெற்றி பெறமுடியும் ?
   அ) சரியான திசையில் பயணித்தால் ஆ) சரியான பலத்தைக் காட்டினால் இ) இலக்கு நோக்கி தீவிரம் காட்டினால்
   ஈ) இம்மூன்றையும் பின்பற்றினால்
3. பூஜ்யத்தைக் குறிக்க இப்பத்தியில் பயன்படுத்தப்பட்ட சொல் எது?
   அ) விழுக்காடு ஆ) சுழியம் இ) பாழ் ஈ) வெற்றெண்
4. தந்தை மகனிடம் முதலில் எதைச் செய்யச் சொன்னார் ?
   அ) குளிக்க ஆ) திருநீறு பூச இ) முகத்தைக் கழுவ
   ஈ) பல் துளக்க
5. நாம் எப்போது நூறு விழுக்காடு பயனைப் பெற முடியும் ?
   அ) விழிப்புடன் இருந்தால் ஆ) திட்டமிட்டு முயன்றால்
   இ) நிறைய உழைத்தால் ஈ) விழிப்புடனும், திட்டமிட்ட முயற்சியுடனும் இருந்தால்.

<u>பகுதி - ஆ (இலக்கணப்பகுதி)</u>

III. <u>சான்று தருக: (எவையேனும் நான்கனுக்கு மட்டும்)</u> (4x1=4)

1. தனிமொழி
   அ.படித்தான் ஆ.சுவைத்தேன் இ. சுவையான தேன்
   ஈ. வாதை

2. இசைநிறை அளபெடை
அ. உரனசைஇ ஆ.கெடுப்பதூஉம்
இ.ஆஅளிய ஈ.உடுப்பதூஉம்
3. பால் வழு
அ. முகிலன் வந்தது ஆ. தங்கை வந்தான்
இ. நீ வந்தேன் ஈ. நேற்று வருவான்
4. வினைமுற்றுத் தொடர்
அ) சென்ற கோதை ஆ) நல்ல மாணவன்
இ) படித்தான் பாரி ஈ) கண்ணா வா !
5. .முறை நிரல்நிறைப் பொருள்கோள்
அ) விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்
ஆ) அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கைப்
பண்பும் பயனும் அது
இ) ஆலத்து மேலே குவளை குளத்துள
வாலின் நெடிய குரங்கு
ஈ) சொல்லரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்

IV. <u>கூறியவாறு செய்க (எவையேனும் நான்கனுக்கு மட்டும்)</u>
(4x1=4)

1. விடுதல் (முதனிலை திரிந்த தொழிற் பெயராக்குக)
(அ) விடு (ஆ) விடுதலை (இ) வீடு (ஈ) விடுகை
2. படித்தாயா? (இக்கேள்விக்கு உற்றது உரைத்தல் விடை எழுதுக.)
அ. தலை வலிக்கும் ஆ.எழுதினேன் இ.படிக்கவில்லை
ஈ. தலை வலித்தது
3. பாடல் ( தொழிற்பெயர் விகுதியை எழுதுக )
அ. அல் ஆ. தல் இ. ல் ஈ. ஆடு
4. மன்னர் (உருபும் பயனும் உடன் தொக்கத்தொகையாக்குக )
அ. மாமன்னர் ஆ. புவிமன்னர் இ. மன்னர்மன்னர்
ஈ. நன்மன்னர்
5. எள்ளை உண் (பொதுமொழி ஆக்குக)
அ. எள் ஆ. எட்டு இ. எள் உண் ஈ.எள் து

V. <u>இலக்கணக் குறிப்பு எழுதுக. (எவையேனும் நான்கனுக்கு மட்டும்)</u> (4x1=4)
1. மாமனிதன்
அ.இடைச்சொல் தொடர் ஆ. இடைத் தொடர்
இ. உரிச்சொல் தொடர் ஈ. எழுவாய்த் தொடர்

2. கிளியாரே தூது செல்வீர்

அ. பால் வழு ஆ. திணை வழு இ. காலவழு
ஈ.திணை வழுவமைதி

3. கைதொழுது

அ. இரண்டாம் வேற்றுமைத்தொகை
ஆ. மூன்றாம் வேற்றுமைத்தொகாநிலை
இ. இரண்டாம் வேற்றுமைத்தொகாநிலை
ஈ). மூன்றாம் வேற்றுமைத்தொகை

4. எங்ங்கிறைவன்

அ. மெய்யளபெடை ஆ.ஒற்றளபெடை
இ உயிரளபெடை ஈ. ஆய்தக்குறுக்கம்

5. மாயோன்

அ) குறிஞ்சி நிலக்கடவுள் ஆ) முல்லை நிலக்கடவுள்
இ) மருத நிலக்கடவுள் ஈ) பாலை நிலக்கடவுள்

VI. <u>கோடிட்ட இடங்களை நிரப்புக: (அனைத்தையும் )</u> (4x1=4)

1. வினாவையே விடையாகக் கூறுவது ___________விடையாகும்.

அ. ஏவல் ஆ. வினா எதிர்வினாதல் இ. சுட்டு ஈ.இனமொழி

2. மூன்று காலங்களிலும் இயல்பாக நடப்பதை நிகழ்காலத்தில் குறிப்பது ______________

அ. இட வழுவமைதி ஆ.கால வழுவமைதி இ. காலவழு
ஈ. இடவழு

3. ஆறு பெரும் பொழுதுகளையும் காலமாக உடைய திணைகள்

அ) குறிஞ்சி,முல்லை ஆ) முல்லை மருதம்
இ)மருதம் ,நெய்தல் ஈ) நெய்தல் பாலை

4. காலம்காட்டும் இடைநிலை மறைந்து வருவது .......................... எனப்படும்.

அ ) வேற்றுமைத்தொகை ஆ) உம்மைத்தொகை
இ) வினைத்தொகை ஈ) பண்புத்தொகை

## பகுதி - இ -(இலக்கியம்)

VII. <u>பின்வரும் செய்யுள் பகுதியைப் படித்துக் கொடுக்கப்பட்ட பலவுள்தெரிவு செய். வினாக்களுக்கு ஏற்ற விடை எழுதுக</u>. [5x1= 5]

"அன்று அவண் அசைஇ அல்சேர்ந்து அல்கி
கன்று எரி ஒள் இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலைச் செப்பம் போகி -
அலங்கு கழை நரலும் ஆரிப்படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி "

<u>வினாக்கள் :</u>

1. இச்செய்யுள் இடம் பெற்ற நூல் எது?
   அ)முல்லைப்பாட்டு ஆ)மலைபடுகடாம் இ) புறநானூறு
   ஈ) ஆற்றுப்படுத்துதல்
2. இந்நூல் எத்தனை அடிகளை உடையது?
   (அ) 582 ) (ஆ) 583 (இ) 586 (ஈ) 580
3. சிவந்த பூக்களைக் கொண்ட மரங்கள் எவை ?
   (அ) மூங்கில் (ஆ) பனை (இ) சந்தனமரம்
   (ஈ) அசோக மரங்கள்
4. இப்பாடலின் பாட்டுடைத் தலைவன்யார்?
   (அ) மன்னன் (ஆ) நன்னன்
   (இ கூத்தன் (ஈ)பாரி
5. இறடிப் பொம்மல் - சொல்லின் பொருளை எழுதுக.
   அ)தினைச்சோறு ஆ) மூங்கில்சோறு இ) அரிசிச்சோறு
   ஈ) கறிச்சோறு

VIII. <u>பின்வரும் உரைநடை பகுதியைப் படித்துத் தொடர்ந்து வரும் பலவுள் தெரிவு வினாக்களுக்கு எற்ற விடைகளை எழுதுக</u>.

[5x1=5]

நான் உயிர்வளி தந்து உயிர்களைக் காக்கின்றேன் தாவரங்களின் ஒளிச்சேர்க்கையில் உணவு உற்பத்திக்கு உதவுகின்றேன்; விதைகளை எடுத்துச் சென்று பல இடங்களிலும் தூவுகின்றேன். பூவின், தேனின், கனியின், தாவரத்தின், உயிரினத்தின் மணத்தை என்னில் சுமந்து, புவியின் உயிர்ச் சங்கிலித்தொடர் அறுபடாதிருக்க உதவுகின்றேன். இவை மட்டுமல்ல, உங்கள் நவீன தொலைத்தொடர்பின் மையமாகவும் நானே உள்ளேன்.

காற்றுள்ள போதே மின்சாரம் எடுத்துக்கொள்' எனும் புதுமொழிக்கு வித்தாகிறேன். புதுப்பிக்கக் கூடிய ஆற்றல் வளமான என்னைப் பயன்படுத்தி மின்னாற்றலை உருவாக்கும் போது நிலக்கரியின் தேவை குறைந்து கனிமவளங்கள் பாதுகாக்கப்படக் காரணமாகிறேன்.

உலகக் காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியா ஐந்தாம் இடம்பெற்றுள்ளது என்பதும் இந்தியாவில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது என்பதும் எனக்குப் பெருமையே.

<u>வினாக்கள் :</u>

1. புவியின் உயிர்ச் சங்கிலித்தொடர் அறுபடாதிருக்க உதவுவது எது ?

   அ) பூக்கள் ஆ) கனிகள் இ)காற்று ஈ) விதை

2. உயிர்வளி என்பது ____________

   அ) காற்று ஆ) ஆக்ஸிஜன் இ) கார்பன் டை ஆக்ஸைடு ஈ) நைட்ரஜன்

3. நிலக்கரியின் தேவை எப்போது குறையும் ?

   அ) காற்றைப் பயன்படுத்தி மின்னாற்றலை உருவாக்கும் போது

   ஆ) நிலக்கரி கொண்டு மின்னாற்றலை உருவாக்கும் போது

   இ) நிலக்கரியைப் பயன்படுத்தாத போது

   ஈ) எதுவுமில்லை

4. 'காற்றுள்ள போதே மின்சாரம் எடுத்துக்கொள்' என்பது ____________

   அ) பழமொழி ஆ) தமிழ்மொழி இ) நவீன மொழி ஈ) புதுமொழி

5. காற்றாலை மின் உற்பத்தி செய்யும் இந்தியாவில் தமிழகம் - __________இடம் வகிக்கிறது

   அ) ஐந்தாம் ஆ) முதலாம் இ) இரண்டாம் ஈ) மூன்றாம்

IX. <u>பின்வரும் கோடிட்ட இடங்களைத் திருக்குறள் சீர்களால் நிரப்புக</u>

[4x1=4).

1. அருமை உடைத்தென் றசாவாமை வேண்டும்

   ............ முயற்சி தரும்

   (அ) சிறுமை (ஆ) வறுமை இ) பெருமை (ஈ) தனிமை

2. உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்

   . ........... அறிவிலா தார்.

   (அ) கற்றவர் (ஆ) கல்லார் இ) வல்லார் (ஈ) மற்றோர்

3. குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்

றுண்டாகச் ______________ வினை

(அ) சேர்வான் (ஆ) செய்வான்இ) சீறுவான் (ஈ) சுற்றுவான்

4. எப்பொருள் எத்தன்மைத் ____________ அப்பொருள்

மெய்ப்பொருள் காண்ப தறிவு.

(அ) எனினும் (ஆ) தாயினும் இ) தென்றாலும் (ஈ) தாகலின்

[அகவயப் பிரிவு- பாடநூல்]

X. பின்வரும் செய்யுள்வினாக்களுள் எவையேனும் இரண்டினுக்கு விடை தருக 2x3=6

1. ஆழிக்கு இணையானது தமிழ்மொழி என்பதை இரட்டுற மொழிதல் மூலம் விளக்குக.
2. இல்லற ஒழுக்கமாக அதிவீரராம பாண்டியர் கூறுவன யாவை?
3. இறைவன் கோவிலை விட்டுச் செல்வதற்குரிய காரணமாகத் திருவிளையாடற் புராணம் கூறுவது யாது?
4. குமரகுருபரர், முத்துக் குமார சுவாமி செங்கீரை ஆடும்போது அவர் அழகை எவ்வாறு வருணிக்கிறா?

XI எவையேனும் மூன்று உரைநடை வினாக்களுக்கு விடையளி

3x4=12

1. இலக்கியத்தில் காற்று எவ்வாறெல்லாம் பேசப்படுகிறது?
2. செயற்கை நுண்ணறிவு ஏன் முதன்மையானதாகக் கருதப்படுகிறது?
3. தமிழ்மொழி பொருள்வளம் உடையது என்பதை விளக்குக
4. மொழிபெயர்ப்பைக் கல்வியாக ஆக்குவதன் மூலம் ஏற்படும் நன்மைகள் யாவை?
5. அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இடையே சின்னஞ்சிறு சச்சரவுகள் ஏற்பட்டு ,இரண்டு பேருமே முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு ஆளுக்கொரு மூலையில் உட்கார்ந்திருக்கும்போது விருந்தினர் வந்தால் நீ என்ன செய்வாய்?

XII பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒரு துணைப்பாடக் கட்டுரை எழுதுக (1x7=7)

1. புயலிலே ஒரு தோணி
2. விண்ணைத்தாண்டிய நம்பிக்கை
3. பாய்ச்சல் சிறுகதைச் சுருக்கம்

XIII. அ.கீழ்க்காணும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. (3)



XIII.ஆ.பார்வைத்திறன் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளி மாணவர்கள் மட்டும் எழுத வேண்டிய வினா.

பின்வரும் பழமொழிகளைத் தொடரில் அமைத்து எழுதுக.(3)

1. விதை ஒன்று போட சுரை ஒன்று முளைக்குமா?
2. அச்சாணி இல்லாத தேர் முச்சாணும் ஓடாது

XIV. போக்குவரத்துக்கு இடையூறாகும் நடைபாதைக் கடைகளை அகற்ற மாநகராட்சித் தலைவருக்குக் கடிதம் எழுதுக. (1x6=6)

( அல்லது )

வெற்றிக்குத் தடையாக இருப்பவை எவை என்பது பற்றி உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

( முகவரி - ந.நித்திலன் / நி. நறுமுகை, 5, பூந்தளிர் குடியிருப்பு, முல்லை நகர், சென்னை - 40)

XV. ஏதேனும் ஒரு பகுதியின் குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை ஒன்று எழுதுக. (1x6=6)

1. முன்னுரை - எது ஒழுக்கம்?-ஒழுக்கத்தின் உயர்வு - குறள்காட்டும் நல்லொழுக்கம் -மாணவரும் ஒழுக்கமும் - ஒழுக்கத்தினால் ஏற்படும் நன்மைகள் - முடிவுரை.

(அல்லது)

2. முன்னுரை - வெற்றிக்கு வித்து முயற்சி - முயற்சியும் வாழ்க்கையும் - முயற்சியால் உயர்ந்தோர்- முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் - மாணவர் முயற்சி - முடிவுரை.

(அல்லது)

3. முன்னுரை - செல்வத்தின் தேவை - உழைப்பும் ஊதியமும் - செல்வத்தை ஈட்டும் வழிகள்- முறையான வருமானமும் - பாதுகாப்பான சேமிப்பும் - சீரான வாழ்வு - முடிவுரை.